# ஹம்பாந்தோட்டை மாநகர சபை
# ஹம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி மாநகர சபை முதல்வர் உட்பட அங்கத்தவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) முன்னைய ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் நிறைவேற்றப்பட்ட 05 நிர்மாண வேலைகள் தொடர்பாக பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய தொகைகளுக்காக ரூபா 1,091,129 இற்காக கடன்பட்டோர் ஏற்பாடுகள் மற்றும் ரூபா 1,030,638 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த மற்றும் நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 826,880 கிரயத்தையுடைய மற்றும் அகற்றப்பட்டிருந்த ரூபா 116,860 தொகைக்கான இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதியினை கணக்குகளில் சீராக்கல் செய்திருக்கவில்லை.

(இ) ரூபா 438,150 தொகைக்கான முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு கட்டணம் மற்றும் மீளாய்வாண்டிற்காக 2018 ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 153,523 தொகைக்கான செலவுகளுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த 2000 லீற்றர் நீர் தொட்டிகள் 04 மற்றும் முன்பள்ளி உபகரணங்களின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களிலுள்ள 05 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய புத்தகங்கள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே, அவதானிக்கப்பட்ட சமமின்மைகள் கூட்டுத்தொகை ரூபா 1,523,593 தெகையாக இருந்தது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2016 ஆண்டிற்கு முன்னர் இருந்து நிலுவையாக காணப்பட்ட ரூபா 68,000 தொகைக்கான வர்தத்தக அனுமதி பத்திரம் மற்றும் கைத்தொழில் வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்ககுகள்**

நீண்ட காலம் முதல் ஒய்வூதியத் தினைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 6,284,777 தொகைக்கான பங்களிப்பு தொகையினை செலுத்தி தீர்ப்பதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 14,023,911 தொகைக்கான கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சுட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவம் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் சந்தர்பங்கள் கீழே காணப்படுகின்றன

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களும் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | சபையின் 11 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை |
| (ஆ) | 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதி பீஈ/01/01 ஆம் இலக்க மின் சக்தி வலு சக்தி அமைச்சின் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமையினல் வீதி விளக்குகள் பராமரிப்பிற்காக மேற் கொள்ளப்பட்ட செலவுகளில் 12 சதவீத்தை அண்மித்த சதவீதத்தினால் மாத்திரம் கட்டணம் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பந்திகள் 2.3.2 (இ) மற்றும் 2.6.1 (ii) | தகவல்கள் முகாமைத்துவ முறைமை ஒன்று கொல்வனவு செய்வதற்கு விவரக் குறிப்பு தயாரிக்கும் போது மற்றும் அங்கீககரிக்கும் போது தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிடம் சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திரக்கவில்லை. |

**1.3.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------------------------------------------

பாதீட்டு ஏற்பாடுகளை மிகைத்து வழங்கல்கள் மற்றும் உபகரணங்கள் செலவு விடயத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 98,239 இற்கான செலவுகளை தீர்பதற்கான மாநகரசபை கட்டளை சட்டத்தின் (அதிகரம் 252) 216 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

------------------------

**2.1 நிதி விளைவுகள்**

------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 2,179,128 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,253,528 தெகை ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 6,877,000 | 7,166,642 | 6,028,788 | 2,050,078 | 6,633,240 | 6,777,418 | 5,469,913 | 2,370,439 |
| (ii) வாடகை | 15,421,000 | 18,598,220 | 18,347,680 | 545,273 | 14,481,200 | 15,410,621 | 14,689,102 | 736,961 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணம் | 2,492,000 | 4,117,732 | 4,005,995 | 584,950 | 2,280,000 | 2,545,968 | 2,188,964 | 514,153 |
| (iv) ஏனைய வருமானங்கள் | 7,352,000 | 7,187,906 | 4,885,463 | 3,491,917 | 6,676,000 | 8,031,036 | 6,383,138 | 4,179,750 |
| மொத்தம் | 32,342,000 | 37,070,500 | 33,267,926 | 6,672,218 | 30,070,440 | 32,765,043 | 28,731,117 | 7,801,303 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 37,070,500 தொகையாக காணப்பட்டதுடன் ஆண்டின் போது அவற்றில் ரூபா 33,267,926 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 6,672,218 ஆக இருந்தது.

**2.2.3 வீத வரி**

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 252(1) இன் பிரகாரம் நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்காமையால் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு ரூபா 2,013,578 இற்கான வீத வரி நிலுவை ஒன்று காணப்பட்டதுடன் 2018 ஜுன் மாதம் அளவில் அவற்றில் ரூபா 517,717 தொகை அறவிடப்பட்டிருந்தது.

**2.2.4 வாடகை**

**(அ) உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்படாமை**

2010 திசெம்பர் 27 ஆம் திகதி தபபா/ பபகௌ/ 2010 / 01 இலக்கம் கொண்ட தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 பந்திக்கு இனங்க அனைத்து உடன்படிக்கைகளும் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டுமெனினும் சபைக்கு சொந்தமான பொதுச் சந்தையின் 30 கடைகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) பெறுமதி மதிப்பீட்டுத் தொகை அறவிடப்படாமை**

மேலே (அ) பந்தியின் குறிப்பிட்டுள்ள சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் புதிய பெறுமதி மதிப்பீட்டு வாடகை சபையின் அங்கீகாரத்துடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும், சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையின் 34 கடைகள் தொடர்பாக 2016 ஆண்டின் போது மற்றும் பஸ் நிலையத்தில் மேல் மாடியிலுள்ள 16 கடைகள் தொடர்பாக 2017 ஆண்டின் போது வழங்கியிருந்த பெறுமதி மதிப்பீடு அறிக்கையின் பிரகரம் வாடகை அறவிடப்படாமையால் 2018 ஜுன் 30 திகதி அளவில் சபை நிதியத்திற்கு ரூபா 1,652,450 இற்கான தொகை ஒன்றினை இழந்துள்ளது.

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக ரூபா 325,920 தொகை மீளாய்வாண்டு இறுதியளவில் நிலுவையாக காணப்பட்டது.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 597,620 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,542,918 தொகை காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுபயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை

முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் , பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதி மற்றும் நலனோம்பு என்பன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செய்பணிகள் கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) ஏற்பாடுகள் மேற்கொள்ளாமை**

(i) வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த 06 செய்பணிகளுக்காக பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

(ii) சபை, நிதியத்தை பயன்படுத்தி நிறைவேற்றுவதற்காக பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த 12 நிர்மாண வேலைகள் ஆண்டின் போது நிறைவேற்றப்படவில்லை.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழில் நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசதத்தில் பொது மக்களின் வாழ்க்கை தரத்தை மற்றம் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் சபையினை தயாரித்திருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணியில் 03 பதவிகள் தொடர்பாக 46 பேருக்கான மிகையும் 15 பதவிகள் தொடர்பாக 22 பேருக்கான வெற்றிடமும் காணப்பட்டன.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

மாநகர சபையினால் பயன்படுத்தப்படும் 06 வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமையும் உரித்தாக்குவதற்காக 2018 16 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 பெறுகை**

**3.4.1 பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான மாநகர சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**3.4.2 ஒப்பந்த வேலை நிருவாகம்**

(அ) மீளாய்வாண்டின் போது சபையினால் நிறைவேற்றப்பட்டிருந்த சில நிர்மான வேலைகள் தொடர்பாக 2018 மார்ச் 16 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் பேது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i) ராஜபக்ஷ மாவத்த இடை சொருகல் அச்சு கற்கள் பதித்தல்**

ரூபா 1,256,641 இற்கான செலவில் நிர்மானிக்கப்பட்டிருந்த இந்தப் பாதையின் அனேகமான இடங்கள் கீழிறங்கியிருந்ததுடன் சுமார் 16 மீற்றர்களுக்காக கற்தூள் போடப்பட்டிருக்கவில்லை

**(ii) மிரிஜ்ஜவில பாதை இலக்கம் 12 மற்றும் 13 இடைச் சொருகல் கொங்கிரிட் அச்சுக் கற்கள் பதித்தல்**

முறையே ரூபா 1,520,109 தொகை மற்றும் ரூபா 662,272 தொகை செலவில் நிர்மானிக்கப்பட்ட இந்த பாதைகளில் அனேகமாக இடங்கள் கீழிறங்கியிருந்ததுடன் கொங்கிரீட் துண்டுகளிடையே பாரிய இடைவெளி ஒன்று ஏற்படக் கூடிய விதமாக துண்டுக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன பாதையின் இரு பக்கங்களிலும் காணப்பட்ட கொங்கிரீட் மேற்பரப்பு பல இடங்களில் வெடிப்பு ஏற்பட்டிருந்ததுடன் போதிய அளவு கற்தூள் போடப்பட்டிருக்கவில்லை மேலும் பாதையின் அத்திவாரத்தை தயாரிக்கும் போது பாதையை தேவையான அளவு தகர்த்து தயாரிக்கப்படாமையினால் கொங்கிரீட் அச்சு கற்கள் கீழ் இறங்க நேரிட்டிருந்தது.

**(iii) ராஜபக்ஷ மாவத்தைக்கு குறுக்காக மதகு ஒன்று நிர்மானித்தல்**

மதகு நிர்மானிக்கும் அலுவல் இடையில் நிறுத்தப்பட்டிருந்தமையினால் அந்த இடம் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. மதிப்பீட்டு கிரயம் ரூபா 227,969 தொகைக்கான இந்த நிர்மாண வேலை உடன்படிக்கை காலத்தை மிகைத்து 6 மாத காலத்தை அண்மித்து இருந்த போதிலும் 2018 ஜுன் இறுதி வரை நிர்மாண வேலையின் அலுவல்கள் பூர்த்தி செய்து பயன்படுத்தக் கூடிய நிலைமைக்கு ஆக்குவதற்காக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2016 ஆண்டு நவம்பர் மாதத்தில் ரூபா 938,500 தொகை செலவிடப்பட்டு கொல்வனவு செய்திருந்த தகவல் முகாமைத்துவ முறைமை சபையின் செயலாற்றலுக்காக ஆக்கபூர்வமான விதத்தில் பயன்படுத்துவதற்காக 2018 ஜுன் இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. தகவல் முகாமைத்துவ முறைமை சேவை வழங்குனர்களின் ஸேவரில் கலஞ்சியப்படுத்தியிருந்தமையால் சபையின் தரவுகள் மற்றும் தகவல்கள் மூன்றாம் தரப்பினர் ஒருவரின்பொறுப்பில் காணப்படுவதன் மூலம் அவற்றின் பிழையற்ற தன்மை, இரகசியத் தன்மை , மற்றும் பதுகாப்பு தொடர்பான சிக்கல்கள் ஏற்பட இடம் உண்டு என அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையே பின்வருமாறு கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) சேவைக் கட்டணம் மற்றும் வருமான உதவி ஆகிய விடயங்களில் பிரதிகூலமாக முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 18.795,668 தொகையாக இருந்ததுடன் அப் பொறுப்பு 20 சதவீதம் மற்றும் 22 சதவீதமாக காணப்பட்டது.

(ஆ) 04 செலவு விடயங்களில் சேமிப்புகளில் கூட்டுத்தொகை ரூபா 1,461,682 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 10 சதவீதம் முதல் 45 வரையான வீச்சில் காணப்பட்டது.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2009 ஜுன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் காலாண்டிற்கு 01 ஆக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது 03 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

2014 பெப்ரவரி 14 திகதி தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் மாநகர சபையின் உள்ளக கணக்காய்வு அலுவல்களுக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | முறைமையின் பிரதன குறைபாடு |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்கு மீதிகள் கைவிடப்பட்டவை, குறைவாகவும் மிகையான காட்டிய சந்தர்ப்பங்கள் காணப்படல். |
| | (ii) கணக்கு பதிவு குறைபாடுகளின் காரணமாக முன்னைய ஆண்டு தொடர்பாக கணிசமான பெறுமதியில் சீராக்கல் மேற்கொள்ள நேரிட்டிருத்தல். |
| | (iii) நிலையான சொத்துக்களை மூலதனப் படுத்தாத சந்தர்பங்கள் காணப்படல். |
| (ஆ) வருமான நிருவாகம் | (i) நிலுவை வருமான அறவீடு செய்தல் குறைந்த மட்டத்தில் காணப்படல். |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | புதிய வருமானம் உருவாக்கும் வழிகளை இனங்காணாமை. |
| | | (iii) | கடைகளில் பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவீடு செய்யாமை மற்றும் உடன்படிக்கை நாளதுவரை ஆக்கப்படாமை. |
| (இ) | ஊழியர் முகாமைத்துவம் | (i) | ஊழியர் வெற்றிடங்களை நிரப்பாமை. |
| | | (ii) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து ஊழியர்களை சேவைகளில் ஈடுபடுத்தல். |
| (ஈ) | ஒப்பந்த நிருவாகம் | (i) | கொடுப்பனவு அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளவாறு கருமங்கள் நிறைவேற்றியிருக்காத சந்தர்பங்கள் காணப்படல். |
| | | (ii) | கொடுப்பனவு அறிக்கைகள் தயாரிக்கும் போது நிர்மாண வேலைகள் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட கருமங்கள் பிழையற்ற முறையில் காட்டப்பட்டிருக்காத சந்தர்பங்கள் காணப்படல் |
| | | (iii) | நிர்மாண வேலைகளின் போது போதியளவு மேற்பார்வை மேற்கொள்ளப்படாத சந்தர்பங்கள் காணப்படல். |
| (உ) | பாதீட்டு கட்டுபாடு | (i) | உரிய ஆய்வு மற்றும் மதிப்பாய்வுடன் மதிப்பீடுகள் தயாரிக்காமை. |
| | | (ii) | பாதீட்டு இலக்குகளை நிறைவேற்றுவதற்காக தொடர் செயல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை. |